பக்கங்கள் 16

மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆவணி 17 ஞாயிற்றுக்கிழமை 03.09.2023 அதிர்வு 34

## மண்மேடு சரிந்து ஒருவர் உயிரிழப்பு

நாவலப்பிட்டி மாகும்புர பகுதியில் மண்மேடு சரிந்து வீழ்ந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

புதிதாக மதிலொன்றை 04

### விகாரை அமைப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து

# திருமலை சாம்பல்தீவு பாலம் அருகே இன்று மனித சங்கிலிப் போராட்டம்!

### தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி முன்னெடுப்பு

திருகோணமலை,செப்ரெம்பர்03

திருகோணமலை இலுப்பைக்குளம் பெரியகுளம் சந்திக்கு அண்மையில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள பொரலு கந்த ரஜமகா விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து இன்றைய தினம் மனித சங் கிலிப் போராட்டம் ஒன்று திருகோணமலை, சாம்பல்தீவு பாலத்திற்கு அருகில் முன்னெடுக்கப்பட்டது. 04



# காவியுடைகளுடன் போலித் துறவிகள்!

### அரசியல் நடவடிக்கைகளில் களம் இறக்கப்பட்டுள்ளனராம்

இலங்கையில் 18 முதல் 20 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, காவி உடை அணிவித்து அவர்களை அரசியல் நோக்கங்களுக் காகப் பயன்படுத்தும் திட்டமொன்று அமுலில் உள்ளதாக 04



## முன்னாள் மாகாண சபை உறுப்பினர் நுவரெலியாவில் மின் தாக்கி மரணம்

நுவரெலியா – சாந்திப்புர பகுதியில் மின்சாரம் தாக்கியதில் மத்திய மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் நுவரெலியா சாந்திப்புர பகுதியை சேர்ந்த 62 வயதான மைக்கல் 04

## நான்கு ஆமைகளின் உடல்கள் நெடுந்தீவிலும் கரை ஒதுங்கின

யாழ்ப்பாணம், நெடுந்தீவு கடற்கரையில் 04 ஆமைகளின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளன என வனஜீவராசிகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் அண்மைய நாள்களில் இதுவரை 35 ஆமைகளின் உடல்கள் 04

# உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் 2 அல்லது 3 நாள்களில்

2022ஆம் ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் இன்னும் 2 அல்லது 3 நாள்களில் வெளியிடப்படும் எனக் கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

அதன்படி, எதிர்வரும் செப்டெம்பர் 6ஆம் திகதிக்கு முன்னர் உயர்தர பரீட்சை பெறுபேறுகள் வெளியிடப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

மேலும், இந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சைத் திகதியை மாற்றுவது குறித்து இதுவரை எவ்வித தீர்மானமும் இல்லை எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

முன்னதாக, 2022 க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகள் கடந்த ஓகஸ்ட் மாத நடுப்பகுதியில் வெளியாகும் என கல்வி அமைச்சர் தெரிவித்திருந்தார்.

எனினும், உயர்தரப் பரீட்சை விடைத்தாள்கள் மதிப்பீடு செய்யும் பணியில் ஏற்பட்ட தாமதத்தினால் உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளை வெளியிடுவதில் தாமதம் ஏற்பட்டது.

உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீடு தொடர்பில் வரிச்சலுகையை கோரி பல்கலைக்கழக ஆசிரியர்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டம் நடத்தியதன் காரணமாக ஏற்கெனவே இரண்டு மாதங்கள் அது தாமதமாகியமை குறிப்பிடத்தக்கது.



# நள்ளிரவில் காரைதீவில் யானைகள் அட்டகாசம்!

( வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவுப் பிரதேசத்தில் காட்டு யானைகளின் அட்டகாசம் தினம் தினம் அதிகரித்து வருகிறது.

அறுவடையை அடுத்து நேற்று முன்தினம் இரவு காரைதீவு வயலை அண்டிய பிரதேசத்தில் சுமார் ஐம்பது யானைகள் பிரவேசித்து இருந்தன.

அதில் ஒரு சில யானைகள் மக்கள் குடியிருக்கும் குடிமனை பகுதியில் புகுந்து அட்டகாசம் செய்தன.

இதன்போது மதில்கள் உடைக்கப்பட்டன. தென்னை, வாழைகள் துவம்சம் செய்யப்பட்டன.

சுமார் நான்கு வீடுகள், உடைமைகள், பயிர் பச்சைகள் சேதமாக்கப்பட்டன.

பின்பு யானை வெடி கொளுத்தியதன் காரணமாக அவை பின் வாங்கின.

இப்பிரதேசத்தில் இவ்வாறு தினமும் யானை –,மனித மோதல் இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

# தூக்கக் கலக்கதில் ஓட்டோவை மரத்துடன் மோதிய சாரதி சாவு!

## வெருகல் - பூநகர் பகுதியில் சம்பவம்

வெருகல் - பூநகர் பகுதியில் ஓட்டோ ஒன்று வீதியோர மரம் ஒன்றில் மோதி விபத்துக்குள்ளானதில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து இன்றைய தினம் (03) அதிகாலை 4 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

ஓட்டோச் சாரதி வெருகல் முருகன் ஆலயத்துக்கு சவாரி சென்று, மீண்டும் வீடு திரும்பிக் கொண்டிருந்தபோது பூநகர் பகுதியில் வைத்து, தூக்க கலக்கத்தில் வீதியோரம் நின்ற மரத்தின் மீது வாகனத்தை மோதியுள்ளார்.

விபத்தில் சாரதி அந்த இடத்திலேயே உயிரிழந்தார்.

உயிரிழந்தவர் இரண்டு பிள்ளைகளின் தந்தையான தியாகராசா ஜெயச்சந்திரன் (வயது 41) என அடையாளம் காணப்பட்டார்.

சடலம் திருகோணமலை வைத்தியசாலைக்கு பிரேத பரிசோதனைகளுக்காக கொண்டு செல்லப்பட்டது. இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை ஈச்சிலம்பற்று பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.





# 157 ஆவது பொலிஸ் தின நிகழ்வுகள் கிண்ணியாவில்

இலங்கை பொலிஸ் திணைக்களத்தின் 157 ஆவது பொலிஸ் தினத்தை முன்னிட்டு கிண்ணியா பொலிஸ் நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள விசேட துஆப் பிரார்த்தனை இன்று (03) கிண்ணியா நத்வதுல் புகாரி அரபுக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெற்றது.

நத்வதுல் புஹாரி அறபு கல்லூரியின் அதிபர் மௌலவி எஸ்.முனீர் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திருகோணமலை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பிரசன்ன பிரகமன்ன பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

கிண்ணியா பிரதேச செயலாளர் எம்.எச்.ஹனி, கிண்ணியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சமிந்த பெர்ணாண்டோ மற்றும் கிண்ணியா உலமா சபை, பொலிஸ் பாதுகாப்பு குழு உறுப்பினர்கள், அறபிக் கல்லூரி மாணவர்கள், உலமாக்கள் என பலர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் ஐந்து குடும்பங்களுக்கு உலர் உணவு பொதிகள் வழங்கப்பட்டன.

# சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கிழக்கு மாகாண அபிவிருத்தி ஆரம்பம்

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவிப்பு

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரைக்கு அமைய உள்நாட்டு வெளிநாட்டு சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் கிழக்கு மாகாண அபிவிருத்தி ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று ஆளும் கட்சியின் பிரதம அமைப்பாளர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்துள்ளார்.

அரசு மிகவும் வலுவாக உரிய இலக்குகளை நோக்கி நகர்ந்து வருவதாகவும் அமைச்சர் வலியுறுத்தினார்.

அண்மையில், அம்பாறை மாவட்டத்தில் உள்ள வீட்டுப் பயனாளிகளுக்கு வீட்டுறுதிப் பத்திரம் மற்றும் வீட்டுக் கடன் வழங்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது அமைச்சர் பிரசன்ன ரணதுங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் ஏற்பாட்டில் அம்பாறை மாவட்ட செயலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு–

ஜனாதிபதியின் பணிப்புரைக்கு அமைவாக கிழக்கு மாகாண அபிவிருத்தியை ஆரம்பித்துள்ளோம். அதற்காக அவர் இந்த மாகாணத்துக்கு வந்து நகரங்களின் அபிவிருத்தி குறித்து நேரில் ஆய்வு செய்து எங்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். நகர அபிவிருத்தித் திட்டங்களைத் தயாரிக்கும் போது, தேசிய வேலைத்திட்டத்துடன் செய்யப்பட வேண்டுமென நான் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆலோசனை வழங்கினேன்.

வெளிநாடுகளை கவரும் வகையில் கிழக்கு மாகாணத்தை அபிவிருத்தி செய்வதற்கு தேவையான பின்னணி தற்போது தயாரிக்கப்பட்டு வருகின்றது. அத்துடன் அரச காணிகளில் வசிக்கும் அனைவருக்கும் காணி அனுமதிப்பத்திரம் வழங்குமாறும் ஜனாதிபதி எமக்கு ஆலோசனை வழங்கினார். அதற்கு தேவையான பணிகளை தற்போது செய்து வருகிறோம். இன்று அரசு அந்தச் செயற்பாடுகளை வலுவாக முன்னெடுத்து வருகின்றது. நாம் அந்தந்த இலக்குகளை நோக்கி நகர்கிறோம்.–என்றார்.





கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், கண்டி அஸ்கிரிய மஹா நாயக்க தேரர், மல்வத்து மகா நாயக்க தேரர் ஆகியோரைச் சந்தித்து ஆசி பெற்றார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்...

## நான்கு...

மீட்கப்பட்டுள்ளன என திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடந்த 22 ஆம் திகதி முதல் மேற்கு கடற்கரையில் 31 ஆமைகளின் உடல்கள் கரையொதுங்கின.

மேலும் 3 ஆமைகளின் ஓட்டில் கடுமையான பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன எனவும் அவற்றுக்கான சிகிச்சைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

கடலில் நிகழ்த்தப்பட்ட வெடிப்பு காரணமாகவே மேற்கு கடற்கரையில் கடலாமைகள் உயிரிழந்துள்ளமை தெரியவந்துள்ளது.

ஆமைகளின் உடல்களில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளில் இந்த விடயம் உறுதியானது.

இது தொடர்பான அறிக்கையும் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

தடை செய்யப்பட்ட மீன்பிடி முறைகளுக்கு டைனமைட் எனப்படும் வெடிமருந்துகளை பயன்படுத்தியதன் காரணமாக கடலில் வெடிப்புகள் ஏற்பட்டிருக்கலாம் எனவும், அதன் காரணமாக ஆமைகள் உயிரிழந்திருக்கலாம் எனவும், வன ஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் சந்தேகிக்கின்றது.

## முன்னாள்

எக்கியூலஸ் டீ. சில்வா எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நபர் தமது வீட்டுத்தோட்டத்தில் பயிரிடப்பட்டிருந்த காய்கறிகளை பாதுகாப்பதற்காக இடப்பட்டிருந்த மின்சார கம்பியில் மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இவர் எதிர்வரும் உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவதற்காக தேசிய மக்கள் சக்தியின் சார்பில் நுவரெலியா பிரதேச சபைக்காக வேட்பு மனு தாக்கல் செய்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## மண்மேடு சரிந்து...

நிர்மாணிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த போதே, மண்மேடு சரிந்து வீழ்ந்துள்ளது எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நபர் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட போதிலும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

வேரலுகஸ்ஹின்ன பகுதியைச் சேர்ந்த 62 வயதான ஒருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சடலம் நாவலப்பிட்டி வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. நாவலப்பிட்டி பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## காவியுடைகளுடன்...

தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் அரச புலனாய்வு பிரிவு தகவல் வெளிப்படுத்தியுள்ளதாக சிங்கள ஊடகம்

ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

துறவு வாழ்க்கைக்கு அனுமதிக்கப்படும் இளைஞர்கள் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் கவசமாகப் பயன்படுத்தப்படுகின்றனர் எனப் புலனாய்வு அமைப்புகள் சுட்டிக்காட்டியுள்ளனவாம்.

இதுவரை சுமார் 500 பேர் பயிற்சி பெற்று துறவிகளாக பயன்படுத்தப்பட்டுள்ளனர் ர்னஅரச புலனாய்வு பிரிவினர் இரகசிய அறிக்கையில் அரசாங்கத்திற்கு தகவல் வழங்கப்பட்டுள்ளது.

இதன் பின்னணியில் அரசியல் கட்சி இருப்பதாக புலனாய்வு பிரிவு கண்டுபிடித்துள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

அரசியல் செயற்பாட்டாளர்கள் சிலர் தமது அரசியல் கருத்துக்களை இந்தப் போலி துறவிகள் மூலம் பரப்பும் வேலைத் திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.

இவ்விடயம் தொடர்பில் உரிய திணைக்களங்களின் கவனம் செலுத்தப்பட வேண்டுமென புலனாய்வுப் பிரிவினர் அரசாங்கத்திற்கு தெரியப்படுத்தியுள்ளதாக அரச உள்ளகமட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## திருமலை...

இந்தப் போராட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராஜா கஜேந்திரன் உட்பட பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர்.

“பௌத்தர்கள் இல்லாத இடத்தில் பௌத்த விகாரை எதற்கு?”, “பெரியகுளம் விகாரை கட்டுமானத்தை உடனடியாக நிறுத்து”, “தொல்லியல் திணைக்களம் பௌத்தத்திற்கு மட்டுமா?”, “தொல்லியல் திணைக்களமே இனவாதத்தை தூண்டாதே” போன்ற வாசகங்களை பொறித்த பதாகைகளை ஏந்தியவாறும், கோசங்களை எழுப்பியவாறும் அவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

ஆர்ப்பாட்டத்தை தடுக்கும் முகமாக திருகோணமலை – நிலாவெளி பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விண்ணப்பத்தின் அடிப்படையில் திருகோணமலை நீதிவான் நீதிமன்றினால் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்வதற்கு 14 பேருக்கு எதிராகத்தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் இளைஞர் அணித் தலைவர் கிருஷ்ண பிள்ளை பிரசாத், தமிழ் பேரவையின் தலைவர் ஆர்.ஜெரோம், செயலாளர் ரமேஷ் நிக்கலஸ், நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், நாடாளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன், குச்சவெளி முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் பொன்னையா வைத்தியலிங்கம், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உட்பட மற்றைய தரப்பாக பௌத்த பிக்குகள் உட்பட 7 பேருக்கும் எதிராக இத்தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கு நிலாவெளி பொலிஸாரால் அந்தத் தடையுத்தரவு வாசித்துக் காட்டப்பட்டமையடுத்து திருகோணமலை – நிலாவெளி வீதியின் சாம்பல்தீவு சந்திப் பகுதியில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுக் கொண்டிருந்த ஆர்ப்பாட்டக்காரர்கள் சாம்பல்தீவு பாலத்திற்கு அப்பால் சென்று தமது எதிர்ப்பு போராட்டத்தை தொடர்ந்தார்கள்.

திருகோணமலை இலுப்பைக்குளம் கிராம சேவகர் பிரிவுக்குட்பட்ட பகுதியில் அண்ணளவாக 540 குடும்பங்களைச் சேர்ந்த 2,202 தமிழ் மக்கள் வாழ்ந்து வருகின்றார்கள். அத்துடன் இதனைச் சூழவுள்ள பெரியகுளம், ஆத்திமோட்டை, சாம்பல்தீவு மற்றும் சல்லி போன்ற கிராமங்களில் தமிழர்கள் மட்டுமே காலாகாலமாக வாழ்ந்து வருகின்றார்கள்.

சிங்கள, பௌத்தர்கள் இல்லாத இப்பிரதேசத்தில் பௌத்த விகாரை நிறுவப்படுமானால் அது மூவின மக்களினதும் ஒற்றுமையை சீர்குலைத்து இன வன்முறைக்கும் வித்திடும் என மக்கள் தமது எதிர்ப்பினை வெளியிட்டு வருகின்றார்கள்.





# தேர்தல் ஆணைக்குழுவின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைப்பு

தேர்தல் ஆணைக்குழுவின் யாழ். மாவட்ட தேர்தல்கள் அலுவலகம் இன்று (03) வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.

தேர்தல் ஆணைக்குழுவின் தவிசாளர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்கவால் இன்று காலை 9 மணியளவில் அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

அலுவலகத்தில் பெயர்ப்பலகை மற்றும் நினைவுப் படிகம் என்பனவும் திரைநீக்கம் செய்து வைக்கப்பட்டன.

தேர்தல் ஆணைக்குழு உறுப்பினர்கள், தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்கா, யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன், யாழ்ப்பாண மாவட்ட உதவி தேர்தல் ஆணையாளர் சி.அமல்ராஜ் உள்ளிட்ட அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.



# ஒலிம்பிக் கழகத்துக்கு விளையாட்டு உபகரணம்

**(நூருல் ஹுதா உமர்)**

மருதமுனை மனாரியன் 88 அமைப்பின் ஆலோசனைகளுக்கும் வழிகாட்டலுக்கும் அமைவாக, மருதமுனை இளைஞர் விளையாட்டு கழகங்களுக்கு உதவுவோம் எனும் நோக்குடன் கழகங்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

இது தொடர்பாக மருதமுனை ஒலிம்பிக் விளையாட்டு கழகத்துடனான கலந்துரையாடல், பர்வின் டிரேடிங் மற்றும் லதான் அக்ரோ இன்டர்நேஷனல் நிறுவன பணிப்பாளர் அல் ஹாஜ் கலில் முஸ்தபாவுடன் மருதமுனை முஸ்தபா கம்லக்ஸ் நிறுவன அலுவ லகத்தில் இடம் பெற்றது.

இதன்போது ஒலிம்பிக் விளையாட்டு கழக கட்டமைப்பு, முன்னேற்றம் மற்றும் எதிர்கால அபிவிருத்திகள் என்பன போன்ற விடயங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்த நிகழ்வில் ஒலிம்பிக் விளையாட்டு கழக வளர்ச்சிக்கு உதவும் நோக்குடன் விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்பட்டது.

பெறுமதியான விளையாட்டு உபகரணங்களை ஒலிம்பிக் விளையாட்டு கழகத்துக்கு வழங்கி உதவிய தொழிலதிபர் கலில் முஸ்தபா மற்றும் மனாரியன் 88 பிரதான செயற்பாட்டாளர் ஐ. எம்.முக்தார் ஆகியோருக்கு இங்கு நன்றி தெரிவிக்கப்பட்டது



# காணாமலாக்கப்பட்டோர் விடயத்துக்குப் பதில் மனிதப்புதைகுழிகளில் புதைந்திருக்கக் கூடும்

## கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணிக்கு ஐ.நா. கண்காணிப்பாளர்கள் அவசியம்

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் எழுப்பப்படும் சில கேள்விகளுக்கான பதில்கள் கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழிகளில் இருக்கக்கூடுமென சுட்டிக்காட்டியுள்ள தமிழ் அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகள், எனவே வரும் செவ்வாய்க்கிழமை முன்னெடுக்கப்படவுள்ள கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளில் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்கள் உள்வாங்கப்பட வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனர்.

சர்வதேச வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தினமான கடந்த ஓகஸ்ட் மாதம் 30 ஆம் திகதி வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் வட, கிழக்கு மாகாணங்களில் கவனவீர்ப்புப்போராட்டங்களை முன்னெடுத்திருந்தனர். இதன்போது சர்வதேசப் பொறிமுறையின் ஊடாக காணாமல்போன தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நேர்ந்தது என்ற உண்மையை வெளிப்படுத்தவேண்டும் என்றும், கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழி அகழ்வுகளை சர்வதேச கண்காணிப்புடன் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர்கள் வலியுறுத்தியிருந்தனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் முல்லைத்தீவு கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வுப்பணிகளை செவ்வாய்கிழமை மேற்கொள்வதென முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

அதன்படி இப்புதைகுழி அகழ்வின் போது பின்பற்றப்படவேண்டிய நியமங்கள் மற்றும் இதனை அடிப்படையாகக் கொண்ட அடுத்தகட்ட நகர்வுகள் எவ்வாறு அமையவேண்டுமெனக் கேள்வியெழுப்பியபோதே அவர்கள் மேற்கண்டவாறு வலியுறுத்தினர்.

மனிதப்புதைகுழி விவகாரங்களை மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த விடயமாகப் பார்ப்பதாகக் குறிப்பிட்ட இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பேச்சா எரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன், அதனடிப்படையிலேயே கொக்குத்தொடுவாய் மனிதப்புதைகுழி அகழ்வு தொடர்பில் விசேட கவனம் செலுத்தப்பட்டிருப்பதாகத் தெரிவித்தார்.

மேலும் வலிந்து காணாமலாக்கப்பட்டோர் தொடர்பில் எழுப்பப்படும் சில கேள்விகளுக்கான பதில்கள் இப்புதைகுழிகளில் இருக்கக்கூடுமென சுட்டிக்காட்டிய அவர், தற்போது கொக்குத்தொடுவாய் புதைகுழி அகழ்வுக்கென ஒதுக்கப்பட்டுள்ள நிதியைப் பயன்படுத்தி இந்நடவடிக்கைகள் உரியவாறு மேற்கொள்ளப்படவேண்டும் என்று வலியுறுத்தினார்.

அதுமாத்திரமன்றி இவ்விடயத்தில் காணாமல்போனோர் பற்றிய அலுவலகம் முன்னின்று செயற்பட்டதைப் போன்று, ஏனைய மனிதப்புதைகுழி அகழ்வு விவகாரங்களிலும் உரியவாறு செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழி அகழ்வுப்பணிகளுக்கான நிதியொதுக்கீட்டை வலியுறுத்துவதில் காணாமல் போனோர் பற்றிய அலுவலகம் முன்னின்று செயற்பட்டதாகவும், அதன்மூலம் இப்பணிகளுக்கென 57 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாகவும் காணாமல்போனோர் பற்றிய அலுவலகத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் சட்டத்தரணி ஜெ.தற்பரன் ஏற்கனவே சுட்டிக்காட்டியிருந்தார்.

அதேவேளை இவ்விடயம் குறித்துக் கருத்து வெளியிட்ட தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்கினேஸ்வரன், கொக்குத்தொடுவாய் உள்ளிட்ட மனிதப்புதைகுழி விவகாரங்கள் தொடர்பில் அரசாங்கம் பக்கச்சார்பற்ற முறையில் விசாரணைகளை மேற்கொள்ளாது என்று குறிப்பிட்டதுடன் எனவே இவ்விசாரணைகள் ஐக்கிய நாடுகள் சபையின் கண்காணிப்பாளர்களின்பங்கேற்புடன்நடைபெறவேண்டியது அவசியம் என்று வலியுறுத்தினார்.

அத்தோடு இதுபற்றி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அதிகாரிகளிடம் தாம் வலியுறுத்தியிருக்கிறார் எனவும், ஐ.நா மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடர் எதிர்வரும் 11 ஆம் திகதி ஆரம்பமாகவிருக்கும் பின்னணியில் கொக்குத்தொடுவாய் அகழ்வுப்பணிகளைக் கண்காணிப்பதற்கு ஐ.நா அதிகாரிகள் அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்று சி.வி.விக்கினேஸ்வரன் தெரிவித்தார்.

# பலநோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர் 886 பேருக்கு நிரந்தர நியமனங்கள்





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கிழக்கு மாகாணத்தில் 2 வருட காலமாக பலநோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பாடாதிருந்த நிரந்தர நியமனமானது, கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் எடுத்துக் கொண்ட முயற்சியின் பலனாகத் தற்போது கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த வகையில் 886 பேருக்கு வழங்கி நேற்று (2) இந்த நியமனங்கள் வழங்கிவைக்கப்பட்டன.

ஒரு லட்சம் வேலை வாய்ப்பு வழங்கும் திட்டத்தின் கீழ் உள்ளவர்களுக்கு கடந்த காலத்தில் நிரந்தர நியமனங்கள் வழங்கப்பட்டது. ஆனால் பலநோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஒரு லட்சம் வேலை வாய்ப்புக்குள் உள்வாங்கப்பட்ட போதிலும், அவர்களுக்கு நிரந்தர நியமனங்கள் இரண்டு வருட காலமாக வழங்கப்படாமல் தற்காலிக நியமனத்திலே பணியாற்றி வந்தனர்.

இந்த நிலையில் ஆளுநர் செந்தில் தொண்டமான், பலநோக்கு அபிவிருத்தி உத்தியோகத்தர்களை மாகாண சபைக்குள் உள்வாங்கி அவர்களுக்கான நிரந்தர நியமனங்களை வழங்கி வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர் விமல வீர திஸாநாயக்க, முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஏ.எல்.எம்.அதாவுல்லா உட்ட திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரச நிர்வாக அதிகாரிகள் என பலர் கலந்து கொண்டனர் கலந்துக்கொண்டனர்.

# மலேசியாவின் சுதந்திர தின நிகழ்வுகள் கொழும்பில்

(அஷ்ரப் ஏ சமத் )

மலேசியா நாட்டின் 66 ஆவது சுதந்திர தின நிகழ்வுகள் இலங்கையில் உள்ள மலேசியத் தூதரகத்தால் கடந்த 31 ஆம் திகதி கொழும்பில் உள்ள சங்கரில்லா விடுதியில் நடத்தப்பட்டன.

பதில் தூதுவர் சார்ஜி.டி அபயார்ஸ் மொஹமட் டுமிங் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக நீதி மற்றும் சிறைச்சாலைகள் அமைச்சர் கலாநிதி விஜயதாச ராஜபக்ஷ பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.



இந்த நிகழ்வில் இலங்கையில் உள்ள ஏனைய நாட்டுத் தூதுவர்கள், கபினட் அமைச்சர்கள், வெளிநாட்டு இராஜாங்க அமைச்சர்கள், கிழக்கு, மற்றும் ஊவா மாகாண ஆளுனர்கள், படைத்தளபதிகள் உட்பட மலேசியா இலங்கை வியாபார, விமான, துறைமுக, கல்வி சம்பந்தமான துறைகளில் முதலீட்டாளர்கள், ஊடகவியலாளர்கள் மலேசியா – இலங்கை நட்புறவுச் சங்க உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்


259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## காவியுடை தரும் பரிசு

தென்னிலங்கை அரசியல் சக்திகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கும், கைப்பற்றிய அதிகாரத்தைத் தக்க வைப்பதற்கும் பௌத்த, சிங்களப் பேரினவாத வெறியை ஒரு கருவியாக பயன்படுத்தி வருவதுதான் இலங்கையின் பேரவல நிலைக்குப் பிரதான காரணம்.

இலங்கை பிரிட்டிஷாரிடமிருந்து சுதந்திரம் பெற்றதாகக் கூறப்படும் காலம் முதல், கடந்த 75 ஆண்டுகளாக இதுவே தீவின் துரதிஷ்ட நிலை. இன்று வரை அதுவே நீடிக்கின்றது.

சிங்கள, பௌத்த பேரினவாதம் அரசியல் அதிகாரத்திற்கான ஆதிக்க போட்டியின் மைய விசையானமை தொடக்கம் இலங்கை அரசியலை நேரடியாகக் குழப்பும் பிரதான சக்தியாக பௌத்த மதத்தின் காவியுடை மாறியது.

'ஆசைதான் துன்பத்திற்குக் காரணம், ஆசையை - அவாவை - அறுமின்' - என்றார் கௌதம புத்தர். பெண்ணாசை, பொன்னாசை, மண்ணாசை எல்லாம் துறந்து பற்றற்ற துறவியாகி உலகுக்கு வழிகாட்டினார் புத்த பகவான்.

ஆனால் அவரின் உயரிய போதனையை மக்களுக்கு எடுத்துச் செல்பவர்கள் என்று கூறப்படும் இலங்கையின் பௌத்த துறவிகள், அவரின் போதனைக்கு மாறாக அவர்களே அரசியல் என்ற அதிகார இச்சைக்குள் - போட்டிக்குள் - காவி உடை தரித்த படி நேரடியாகக் களம் இறங்கியுள்ளனர்.

பாகிஸ்தானில் ஜனநாயகவ்அரசியலை இராணுவம் ஆட்டுவிப்பது போல, இலங்கை அரசியலை பௌத்த பிக்குகளே ஆட்டிப் படைக்கின்றனர் - புத்த பகவான் கூறிய உயரிய விழுமியங்களின் வழியில் அல்ல, மாறாக பேரினவாத மேலாண்மை வெறிப்போக்கில். அதுதான் இலங்கையின் இன்றைய மோசமான துரதிஷ்ட நிலைக்குப் பிரதான காரணம்.

பற்றைத் துறந்த துறவிகள் என்று கூறப்படும் பிக்குகளும் தேரர்களும் காவி உடை தரித்தபடி, அதன் மூலம், அரசமைப்பின் பிரகாரமும் பௌத்த - சிங்கள மக்களின் பண்பியல்பின் அடிப்படையிலும் கிட்டிய மரியாதையையும் மேன்மையையும் சாதகமாகப் பயன்படுத்தி, இலகுவாக அரசியல் ஆதிக்கத்தை நிலைநாட்டி வருவதால், அந்த மார்க்கத்தையே தமது அரசியல் இலக்குகளை அடைவதற்கான வழி முறையாகவும் அரசியல்வாதிகள் பயன்படுத்தத் தலைப்பட்டு விட்டனர் என்ற செய்தியும் இப்போது வெளியாகியிருக்கின்றது.

18 முதல் 20 வயதுக்கு இடைப்பட்ட இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்து, காவி உடை அணிவித்து, அவர்களை அரசியல் நோக்கங்களுக்காகக் களமிறக்கும் பெரும் திட்டம் ஒன்றும் நடைமுறையில் இருப்பதாக அரச புலனாய்வுப் பிரிவுத் தகவல்களை மேற்கோள் காட்டி செய்திகள் வெளியாகின்றன.

இப்படித் துறவு வாழ்வின் பெயரில் காவி உடை தரித்த இளைஞர்கள் போராட்டங்கள், எதிர்ப்பு நடவடிக்கைகள், ஆர்ப்பாட்டங்கள் போன்றவற்றில் கவசமாகப் பயன்படுத்தப்படுகின்றனர் என்று புலனாய்வு அமைப்புகள் சுட்டிக்காட்டி உள்ளனவாம்.

ஆசையை அறுத்தவர்கள் என்று கருதப்படும் காவி உடைத் துறவிகளை அரசியல் பேராசை என்னும் சாகரத்தில் இறக்கி அழகு பார்த்த பௌத்த - சிங்கள பேரினவாத மக்கள், அதன் விளைவை எதிர்கொள்ளும் காலம் கனியத் தொடங்கி இருக்கிறது.

இராணுவத் தலையிட்டால் உண்மையான ஜனநாயக விழுமியங்களைத் தொலைத்த பாகிஸ்தான் மக்கள் போல, மகாவம்ச மனவமைப்பில் மூழ்கிய இலங்கைக்கு அதனால் அதன் ஜனநாயகத்துக்குக் கிடைத்த பரிசு இதுதான்!



## வடிகானில் பாதுகாப்பு மூடி இடப்படாமையால் சிரமம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நிந்தவூர் பிரதேச சபை பிரிவுக்குட்பட்ட உள்ளூர் வீதியான தக்வா கோஸ்வே வீதியின் ஓரமாக வெள்ள நீர் வடிந் தோடுவதற்காக அமைக்கப்பட்டுள்ள வடிகானின் மேலாக தொடர்ச்சியாக பாதுகாப்பு மூடி இடப்படாமையால் இப்பாதையைப் போக்குவரத்துக்குப் பயன்படுத்துவோரும், பிரதேச வாசிகளும் பலவிதமான இன்னல்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இந்தப் பாதை நிர்மாணப் பணிகள் இடம்பெற்றுக் கொண்டிருந்த வேளையில் இப்பிரதேச மக்கள் இவ்விடயம் சம்பந்தமாக அதிகாரிகளிடம் தெரிவித்திருந்த போதிலும் எந்தவிதமான நடவடிக்கைகளும் எடுக்கப்படாமை கவலையளிப்பதாக பிரதேசவாசிகள் கவலை தெரிவித்தனர்.

இரவு வேளையில் இந்தப் பாதையை பயன்படுத்துவோர் மிகவும் அவதானமாக நடந்து கொள்ள வேண்டியுள்ளது.

## நற்பிட்டிமுனை பத்ரகாளி மகா கும்பாபிஷேகம்

( வி.ரி. சகாதேவராஜா)

வரலாற்றுப் பிரசித்தி பெற்ற கல்முனை மாநகர் நற்பிட்டிமுனை ஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய பிரதிஷ்டா மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 6 ஆம் புதன்கிழமை கர்மாரம்பத்துடன் ஆரம்பமாகிறது.

மறுநாள் 7ஆம் தேதி வியாழக்கிழமை காலை 7 மணி முதல் எண்ணைய்க்காப்பு சாத்தும் நிகழ்வு இடம்பெறும்.

இங்குள்ள விசேஷம் என்னவென்றால் எண்ணெய் காப்பாக அம்மனுக்கு வேப்பஞ்சாறு சாத்துவது வழமையாகும்.

தொடர்ந்து 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 9.19 மணி முதல் 10.41மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில் மகா கும்பாபிஷேகம் இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து 12 நாள்கள் மண்டலாபிஷேகம் நடைபெற்று 20ஆம் திகதி 1008 சங்குகளுடன் கூடிய சங்காபிஷேகம் இடம்பெறும் .

பிரதிஷ்டா பிரதம குரு சிவஸ்ரீ சு.சுதர்சன் குருக்கள் தலைமையிலான சிவாச்சாரியார்கள் கும்பாபிஷேக கிரியைகளை தொடர்ந்து மேற்கொள்வார்கள் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்தார்கள்.

## கல்முனை ஸாஹிரா கல்லூரியில் விஷேட உசாத்துணை நிகழ்வுகள்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

2024 ஆம் ஆண்டு க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள கல்முனை ஸாஹிரா தேசியக் கல்லூரி விஞ்ஞானப்பிரிவு மாணவர்களுக்கான விஷேட உசாத்துணை நிகழ்வு கடந்த வியாழக்கிழமை (31) கல்லூரியில் இடம்பெற்றது.

மாணவர் மையக் கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் கல்லூரி அதிபர் எம்.ஐ.ஜாபிரின் ஆலோசனையின் பேரில் மேற்படி நிகழ்வு இடம்பெற்றது.

கல்லூரியின் பழைய மாணவர் சங்க செயலாளர் டாக்டர் எம்.என்.எம்.தில்ஷான் மற்றும் பழைய மாணவர் சங்க நிர்வாகக் குழு உறுப்பினர் டாக்டர் ஏ.டபிள்யூ.ஏ.ஸிஹாப் ஆக்கில் ஆகியோர் இதில் வளவாளர்களாகக் கலந்து கொண்டனர்.

# கட்சியை உறுதி நிலைக்குக் கொண்டு வருவதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவிப்பு

(பௌசுல் றிபாஸ், நூருல் ஹுதா உமர் )

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சிக்கு சில இடங்களில் தொய்வு நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதனை மாற்றி மைத்து கட்சியின் நிலமையை உறுதி நிலைக்குக் கொண்டு வருவதற்கு இந்த ஞாபகார்த்த நிகழ்வை பயன்படுத்த உத்தேசித்துள்ளோம். அதற்கு அனைவரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

தற்போது ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஓர் அணியாக ஒற்றுமையாகயிருப்பது கட்சிக்கு பெரும் உத்வேகத்தை உருவாக்கியிருக்கின்றது.

இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மறைந்த ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஸ்றபின் சிராத்த தினத்தை சாய்ந்தமருதில் நடத்துவது தொடர்பாக நடைபெற்ற கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையில் இவ்வாறு தெரிவித்தார்.

முன்னாள் கல்முனை மாநகர மேயர் சிராஸ் மீராசாஹீப் தலைமையில் அவரது இல்லத்தில் வெள்ளிக்கிழமை இரவு (01) நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றும் போது தெரிவித்துள்ளவை வருமாறு-

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி அழிந்து போய்விட்டது என்று சொல்பவர்கள் மத்தியில் இந்தக் கூட்டம் சொல்லும் செய்தி கட்சியின் எழுச்சியையும் வீரியத்தையும் காட்டுகிறது என நான் நினைக்கிறேன்.

கலாநிதி சிராஸ் மீராசாஹீப் மெட்ரோபொலிடன் கல்லூரியினுடைய பட்டமளிப்பு விழாவை நடத்துவதை நான் அவதானித்திருக்கிறேன். அதனை அவர் பெரும் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாக்களை விடவும் தேர்த்தியாகவும், ஒழுங்கு முறையாகவும் நடத்துவார். அவர் தனக்கு வழங்கப்பட்ட பணியை தேர்த்தியாக செய்வார் என்பது நாம் மேயர் பதவி வழங்கியதிலிருந்து அறிந்த விடயம். கட்சியிலிருந்து விலகிச் சென்று இன்று மீண்டும் இணைந்துள்ள இருவர் மூலமாக கட்சி பெரும் உற்சாகமடைந்திருக்கிறது. அவர்கள் கலாநிதிகளான எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், சிராஸ் மீராசாஹீப் ஆவார்கள். இருவரும் இந்தக் கட்சியில் மிகப்பெரும் மக்கள் செல்வாக்கைக் கொண்டவர்கள்.

செப்ரெம்பர் 16 மறைந்த பெருந் தலைவர் எம்.எச்.எம்.அஸ்றப் பை இழந்த நாள். அவரது மறைவின் சோகம் இன்னும் எங்களை தொடர்ந்தும் பாதித்துக் கொண்டியிருக்கிறது. அவருடைய நினைவு தினத்தை கட்சியின் புதிய யுகத்துக்கான ஆரம்பமாக மாற்றிக் கொள்ள வேண்டும் என்பது கட்சி முக்கியஸ்தர்களது பலரது விருப்பமாகும்.- என்றார்.







இந்நிகழ்வில் கலாநிதி சிராஸ் மீராசாஹீப் உரையாற்றுகையில்,

மறைந்த தலைவர் எம்.எச்.எம். அஸ்றபின் நினைவேந்தல் விழாவை சாய்ந்தமருது மண்ணில் நடத்துவதற்கு அனுமதியளித்து அதற்கான சந்தர்ப்பத்தை வழங்கிய கட்சி தலைமைக்கும் உயர் பீடத்துக்கு நான் நன்றியை தெரிவிக்கிறேன்.

கடந்த காலங்களில் கல்முனை மாநகர சபையில் சாய்ந்தமருது சார்பாக கட்சிக்கு 90 வீதமான வாக்குகளை நாம் பெற்றுக் கொடுத்திருந்தோம் அதே போன்று ஒரு எழுச்சியை மீண்டும் இந்த மண்ணில் தலைவரது நினைவேந்தல் நிகழ்வு மூலமாக சாதித்துக்காட்ட இருக்கிறோம்.

இந்தக் கட்சியிலிருந்து தூரமாகியிருக்கும் கட்சித் தொண்டர்களையும், ஆதரவாளர்களையும் இந்தப் பிரதேசத்தில் மீண்டும் ஒன்றினைத்து புதிய உற்சாகத்துடன் செயற்பட நாங்கள் தயாராகவிருக்கிறோம். இந்த ஒற்றுமையை இப் பிரதேசத்தில் ஏற்படுத்துவதற்காக நாங்கள் எதையும் விட்டுக் கொடுக்க தயங்க மாட்டோம்.

பதவி, பட்டங்கள் இறைவன் நாட்டத்தால் கிடைப்பவை. இவற்றுக்காக நாங்கள் அரசியல் செய்ய வரவில்லை. சமூகத்தின் விடிவுக்காக, மக்களின் முன்னேற்றத்துக்காகச் செயற்படக் கூடிய கட்சியை உருவாக்கவும், வளர்க்கவுமே நாங்கள் இந்த அரசியலில் இணைந்திருக்கிறோம்.

இந்த வகையில் ஒரு பெரும் விழாவாக இந்த சிரார்த்த தினத்தை நிகழ்த்தி காட்டுவதோடு சாய்ந்தமருது மக்களின் ஒற்றுமையை மீண்டும் உலகறிய செய்வதற்கு சாய்ந்தமருது மக்கள் என்னோடு பூரண ஒத்துழைப்பு தரவேண்டும். விழா ஏற்பாடுகளிலும் பங்கெடுக்க வேண்டும்.-என்றார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தவிசாளர் அப்துல் மஜீத், நாடாளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், பைசல் ஹாசீம், எம்.எஸ்.தௌபீக், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.எல்.எம்.ஹிஸ்புல்லாஹ், எம்.ஐ.எம்.மன்சூர், முன்னாள் மாகாண அமைச்சர் எம்.எஸ்.உதுமாலெவ்வை உட்பட அரசியல் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

# "மூச்சு" குறுந்திரைப் படத்தின் ஆரம்ப பூஜை நிகழ்வுகள்







(த.சுபேசன்)

கொடிகாமம் நட்சத்திரமஹால் பெருமையுடன் வழங்கும், கலைஞானி கே.ரி.குமரநாதனின் "மூச்சு" குறுந்திரைப் படத்தின் ஆரம்ப பூஜை நிகழ்வுகள் வெள்ளிக்கிழமை (01) கொடிகாமம் நட்சத்திரமஹால் மண்டபத்தில் இடம் பெற்றது.

வரணி சைவப்பிரகாச வித்தியாலய அதிபர் வை.விஜயகுமாரன் தலைமையில் இடம்பெற்ற மேற்படி குறுந்திரைப்பட ஆரம்ப விழாவில் இந்து மத குரு, குறுந்திரைப்பட இயக்குனர் கே.ரி குமரநாதன், சமூக சேவகரும் நிதிப் பங்களிப்பாளருமான பரமானந்தம், தொழில் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் க.ஈஸ்வரன், மட்டுவில் கமலாசினி வித்தியாலய முதல்வர் கே.சந்திரகுமார், சாவகச்சேரிப் பிரதேசசபையின் முன்னாள் உப தவிசாளர் மயூரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எழுத்து, இயக்கம், தயாரிப்பு மற்றும் பாடல் உருவாக்கம் கலைஞானி கே.ரி. குமரநாதன், உதவி இயக்கம் - கே.பி.ரூபில், கலை இயக்கம்- ம.அனோஜன், சண்டைப் பயிற்சி- சி.யர்சிலீன், ஒளிப்பதிவு மற்றும் படத்தொகுப்பு- பி.செல்வம், இசை- அருணா கேதீஸ் மற்றும் போஸ்ரர் வடிவமைப்பு -ஞா.தனிஸ் ஆகியோரின் கூட்டிணைவுடன் கல்வி கற்பதற்கு வறுமை தடை இல்லை என்ற மண் சார்ந்த பிரச்சினையை வெளிக் கொண்டுவரும் வகையில் "மூச்சு" குறுந்திரைப்படம் வெளிவரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# யோகக்கலை கற்கைநெறி நல்லூரில் ஆரம்பம்

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் இளைஞர் விவகார அலகால் உடல், உள மேம்பாட்டுக்காக இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகக்கலை அடிப்படை கற்கைநெறியின் புதிய பிரிவு நல்லூர்க் கந்தன் ஆலய பின் வீதியில் அமைந்துள்ள நல்லூர் மங்கையற்கரசி வித்தியாலயத்தில் எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 6 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

சனி, ஞாயிறு தினங்களிலும் அரச விடுமுறை தினங்களிலும் காலை 6 மணி முதல் காலை 8 மணிவரை நடைபெறும் இந்த வகுப்புகளில் ஆர்வமுள்ள ஆண்கள், பெண்கள் இருபாலாரும் வயது வேறுபாடின்றி கலந்து கொள்ள முடியும்.

சுமார் மூன்று மாத காலங்களைக் கொண்டமைந்த இந்த அடிப்படைக் கற்கை நெறியை பூரணமாக முடிப்பவர்களுக்கு கல்வி அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவிருக்கின்றன.

பயிலவிரும்புவோர் வடமாகாண கல்வி அமைச்சில் விண்ணப்பப் படிவங்களை பெற்று கல்வி அமைச்சு , வடமாகாணம், இளைஞர் விவகார அலகு, செம்மணிவீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமோ அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களை 021 222 2203 எனும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொண்டு பெற்றுக் கொள்ளலாம் எனவும் கல்வி அமைச்சின் செயலாளர் ம. பற்றிக் டிறஞ்சன் அறிவித்துள்ளார்.

# சிட்னியில் தமிழ் எழுத்தாளர் விழா !




ஆஸ்திரேலியா தமிழ் இலக்கிய கலைச் சங்கத்தின் வருடாந்த தமிழ் எழுத்தாளர் விழா எதிர்வரும் 10 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை சிட்னியில் தூங்காபி சமூக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

ஆஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்களின் நூல்களின் கண்காட்சி, மலையகம் 200 கருத்தரங்கு, வாசிப்பு அனுப வப்பகிர்வு முதலான நிகழ்ச் சிகள் நடைபெறவிருக்கின்றன. அத்துடன் எழுத்தாற்றல் மிக்க மணவர்களுக்கான சான்றி தழ்களும் வழங்கப்படும்.

இந்த நிகழ்வில் இலக்கியப் படைப்பாளி தாமரைச்செல்வி ஐம்பது ஆண்டுகால எழுத்து ழியப் பங்களிப்பைப் பாராட்டிக் கௌரவிக்கப்படவுள்ளார்.

2023 தமிழ் எழுத்தாளர் விழாவின் காலை அரங்கில் வரவேற்புரையை கலாநிதி கார்த்திகா கணேசர் நிகழ்த் துவார். அதன்பின் கலாநிதி சந்திரிகா சுப்ரமணியன், மேயரை வரவேற்று உரையை ஆற்றுவார். அதன்பின் இளம் எழுத்தாளர்களுக்கான சான் றிதழ்கள் பிரதம அதிதி கம்பர் லாந்து மேயரால் வழங்கப்படும்.

இந்த எழுத்தாளர் நிகழ் வில் முக்கியமாக ஆஸ்திரேலி யாவில் புலம்பெயர்ந்து வாழும் இலக்கியப்படைப்பாளி தாம ரைச்செல்வியின் ஐம்பது ஆண்டுகால எழுத்தூழியப் பங்களிப்பை பாராட்டி, கௌரவிக்கும் வண்ணமாக, கலாநிதி சந்திரிக்கா சுப்ரமணியன் ஆங்கில உரை மூலம் அறிமுகம் செய்வார். அதன்பின்னர் "தாமரைச் செல்வியின் இலக்கியப் பங்களிப்பு" பற்றி எழுத்தாளர் லெ.முருகபூபதி உரையாற்றுவார்.

ஆஸ்திரேலியாவில் வசியும் தமிழ் எழுத்தாளர்களின் நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வும் இவ் எழுத்தாளர் விழாவில் நடைபெறும்.

நடேசன் எழுதிய தாத்தாவின் வீடு நாவலுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வை ரஞ்சகுமார் ஆற்றுவார்.

தேவகி கருணாகரன் எழுதிய அவள் ஒரு பூங்கொத்து சிறுகதை தொகுப் புக்கான நூல் வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையை சௌந்தரி கணேசன் ஆற்றுவார்.

ஐங்கரன் விக்கினேஸ்வரா தொகுத்த 'இலங்கை இதழியலில் சிவகுருநாதன்' கட்டுரை தொகுப்பு நூலுக்கான வாசிப்பு அனுபவப் பகிர்வு உரையை ம. தனபாலசிங்கம் ஆற்றுவார்.

முருகபூபதி எழுதிய சினிமா பார்த்ததும் கேட்டதும் கட்டுரை தொகு திக்கான உரையை கிறிஸ்டி நல்ல ரெத்தினம் ஆற்றுவார்.

அத்துடன் தெய்வீகனின் நாடற்ற வர்களின் கடவுச் சீட்டு நூலுக்கும், சந்திரிக்கா சுப்பிரமணியன் நூலின் வாசிப்பு அனுபவ உரையை இந்துமதி ஸ்ரீநிவாசன் ஆற்றுவார்.

சிட்னி எழுத்தாளர் விழா நிகழ்வின் மதிய இடைவேளையின் பின்னர் மாலை அரங்கில் ஆஸ்திரேலிய தமிழ் எழுத்தாள்களின் நூல்கள், இதழ்கள் கண்காட்சியும் கலந்துரையாடலும் நடைபெறும்.

மலையகம் 200 சிறப்பு அரங்கில் நிகழ்கால எழுத்தாள ஆளுமைகளின் காணலை ஒளிபரப்பாகும். நோர்வே சரவணனன், கனடா மீரா பாரதி, ஆகியோரின் பதிவுகள் காண்பிக்கப் படும். மாலை அரங்கில் அருண் குமாரசாமி குழுவினர் வழங்கும் இசைக் கலை நிகழ்வும் நடைபெறும்.

தொடர்ந்து, சுவாரஸ்யமான கதை களத்துடன் வெளியிடப்பட்ட "பிலிங்க்" தமிழ் குறும்படமும் சிட்னி தமிழ் எழுத்தாளர் விழாவில் காண்பிக்கப்படும். ஆஸ்திரேலிய – இந்தியாவை தளமாகக் கொண்ட கம் லீஃப் என்டர்டெயின்மெண்ட் தயாரிப்பில், கதிர் இயக்கிய தமிழ் இலங்கை குறும்படம் "பிலிங்க்" இலங் கையில் வெளியிடப்பட்டது.

இது ஒரு சுவாரஸ்யமான கதைக் களத்துடன் அருண் குமாரசாமியின் தனித்துவமான இசையுடன் சிறப்பாக தயாரிக்கப்பட்டது. சுமதி குமாரசாமியின் இயக்கத்தில் கம் லீஃப் என்டர்டெயின் மெண்ட் தயாரித்த, "பிலிங்க்" திரைப்படம், இலங்கை தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் தரங்கணி திரையரங்கில் அதன் முதல் காட்சியை அண்மையில் நடத்தியதும் அறிந்ததே.

நிகழ்ச்சியின் இறுதியில் நன்றியு ரையை ஆஸ்திரேலியத் தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் செயலாளர் ஆற்றுவார்.

ஆஸ்திரேலியாவில் புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்கள் சிட்னி தமிழ் எழுத்தாளர் விழாவில் கலந்து சிறப்பிக்குமாறு எழுத்தாளர்களையும் கலை, இலக்கிய ஆர்வலர்களையும் வேண்டிக் கொள்கிறது. அத்துடன் ஆஸ்திரேலியாவில் தமிழையும் ஒரு பாடமாக உயர்தர வகுப்பில் பயிலும் மாணவர்களையும், தமிழ்மொழிப் பாடம் பயிற்றுவிக்கும் ஆசிரியர்க ளையும் கலந்து சிறப்பிக்க ஆஸ்திரே லியா தமிழ் இலக்கிய கலைச்சங்கம் அன்புடன் வேண்டுகிறது.

– ஐங்கரன் விக்கினேஸ்வரா.




# இளவாலை உதைபந்தாட்டச் சுற்று தேவரையாளி யங்லயன்ஸ் வெற்றி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

இளவாலை வருத்தபடாத வாலிப சங்கம் தனது 10 ஆம் ஆண்டு நிறைவு விழாவை முன்னிட்டு நடத்தி வரும் அணிக்கு 09 பேர் உள்ளடக்கிய “வாலிப கிண்ணம்” மாபெரும் உதைபந்தாட்ட போட்டியில் தேவரையாளி விளையாட்டுக் கழகம் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு தெரிவாகியுள்ளது.

இளவாலை புனித கென்றியரசர் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற போட்டியில் தேவரையாளி யங்லயன்ஸ் அணியை எதிர்த்து பெரிய விளான் புனித அனரனீஸ் அணி மோதியது. ஆரம்பத்தில் இருந்து விறுவிறுப்பாக இடம்பெற்ற போட்டியில் முதல் பாதியாட்டத்தில் அபாரமாக 02 கோலின் மூலம் யங்லயன்ஸ் முன்னிலை பெற்றது .

இரண்டாவது பாதியாட்டதில் போட்டியை முழுமையாக தம்வசப்படுத்திய யங்லயன்ஸ் மேலும் 03 கோல்களை போட, முடிவில் யங்லயன்ஸ் அணி 05:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேறியது.

யங்லயன்ஸ் அணிசார்பாக சிவனாத் 02 கோல்களையும் கௌசிகன், டிலைக்சன், நிலோஜன் தலா ஒவ்வொரு கோல்களையும் போட்டனர். போட்டியின் ஆட்ட நாயகனாக யங்லயன்ஸ் அணியின் வீரர் சிவனாத் தெரிவு செய்யப்பட்டார்.







# பாராட்டிக் கௌரவிக்கும் நிகழ்வுகள்

(நூருல் ஹுதா உமர்)

மருதமுனை கிரிக்கெட் வரலாற்றில் சிறப்புமிக்க தொடராகவும், பிரமாண்ட பரிசுத் தொகைகளைக் கொண்ட தொடராகவும் கணிக்கப்பட்ட மருதமுனை ஜமைக்கின் விளையாட்டு கழக கிரிக்கெட் தொடரின் போட்டியை சிறப்பு மிக்க தொடராக வடிவமைத்த கழகத்தின் தலைவர் ஏ.ஆர்.எம். தௌபீக், பொதுச் செயலாளர் எம்.எஸ்.எம். பௌமி ஆகியோரை கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினரும் அல் மீஸான் பௌண்டஷன் ஸ்ரீலங்காவின் மருதமுனை இணைப்பாளருமான ஸமட் ஹமீட் பொன்னாடை போர்த்தி கௌரவித்தார்.

# ஜனாதிபதி வைத்தியசூரி விருது: அம்பாறையில் ஒருவர் தெரிவு!






(வி.ரி.சகாதேவராஜா)

இலங்கை சுகாதார அமைச்சின் ஆயுள்வேத திணைக்களம் வைத்தியர்களிடையே நடத்திய தேசிய விருது வழங்கல் போட்டியில் சிறந்த ஆயுள்வேத வைத்தியராக காரைதீவு ஆயுர்வேத வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எம்.சீ.எம். காலித் வைத்திய கலாசூரி என்ற ஜனாதிபதி விருது பெற்றார்.

இந்த விருதுக்காக நாடளாவிய ரீதியில் 17,000 ஆயுள்வேத வைத்தியர்கள் விண்ணப்பித்திருந்தார்கள். இவர்களில் பாரம்பரிய வைத்தியர்கள் பட்டதாரி வைத்தியர்கள் அடங்குவார்கள் . இந்த 17,000 பேரில் 120 வைத்தியர்கள் தேசிய மட்டத்தில் வைத்தியசூரி ஜனாதிபதி விருதுக்குத் தெரிவு செய்யப்பட்டார்கள்.

அவர்களுக்கான விருது வழங்கும் நிகழ்வு கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாடு மண்டபத்தில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க முன்னிலையில் நடைபெற்றது .

அங்கு கிழக்கு மாகாணத்தில் இருந்து மூவர் மாத்திரமே இவ்விருதுக்கு தெரிவு செய்யப்பட்டிருந்தார்கள். அதிலும் அம்பாறை மாவட்டத்தில் இருந்து ஒரே ஒருவராக டாக்டர் காலித் தெரிவாகியுள்ளார்.

அவரை சம்மாந்துறை ஆயுர்வேத வைத்திய பாதுகாப்பு சபை நேற்று முன்தினம் பாராட்டி கௌரவித்தது.

# நீர்க்களைகளால் மூடப்பட்டுள்ள சாய்ந்தமருது தோணா ஆறு

(அஸ்ஹர் இப்றாஹிம்)



சாய்ந்தமருது பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பிரதேசங்களில் சேரும் வெள்ள நீரை கடலுடன் கலக்கச் செய்வதற்கும், பிரதேச மக்களை வெள்ள அனர்த்தத்திலிருந்து பாதுகாப்பதற்கும் பெரிதும் உதவும் தோணா ஆறு இன்று நீர்க்களைகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

சாய்ந்தமருது தோணா ஆறு நுளம்புகள் பெருகும் இடமாகவும், விஷ ஜந்துக்கள் வாழும் கேந்திர நிலையமாகவும் மாறியுள்ளமை இப்பிரதேச மக்களை விசனத்துக்கு ஆளாக்கியுள்ளது.

இரவு வேளைகளில் இந்த தோணாவிலிருந்து தோன்றும் துர்நாற்றம் இப்பிரதேசத்தையே ஆக்கிரமித்துக் கொள்கின்றது. இதனால் இப்பிரதேச மக்களுக்கு சுகாதார சீர்கேடு ஏற்பட்டு தொற்று நோய்களுக்கும் ஆளாகி வருகின்றனர்.

காரைதீவு- நிந்தவூர் வெட்டுவாய்க் காலில் இருந்து ஆரம்பமாகும் இந்த தோணா ஆறு காரைதீவு, மாளிகைக் காடு, சாய்ந்தமருது பிரதேசத்தின் அரைவாசியை ஊடறுத்து சாய்ந்தமருது கடலையண்டிய முகத்துவார பிரதேசத்தில் முடிவடைகின்றது.

இதனால் நன்னீர் மீன்படியில் ஈடுபட்டு வந்த பல மீனவர்கள் தொழிலை இழந்துள்ளனர்.

இரவு வேளைகளில் தோணாவின் இரு புறமும் குடியிருக்கும் பொது மக்கள் நடமாடுவதற்கு மிகவும் அச்சத்துடன் உள்ளனர். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இந்த நீர்க்களைகளை அகற்றுவதற்கான முயற்சியில் ஈடுபடுமாறு பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.

### இன, மத, பேத கட்சிகளை உருவாக்கி

# மக்களை சொல்லணா துயரங்களுக்குள் தள்ளிவிட்டுள்ளன அரசியல் தலைமைகள்

### தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திரா




(ஹஸ்பர்)

அரசியல் தலைமைகள் இன, மத, பேத கட்சிகளை உருவாக்கி மக்களை தொடர்ந்தும் பேரம் பேசும் சொல்லணா துயரங்களுக்கு தள்ளி விட்டுள்ளன.

நாடு எந்தளவு பாரதூரமான நிலைக்கு பாதிக்கப்பட்டுள்ளதோ அந்தளவுக்கு பாதிக்கப்பட்டு பல நெருக் கடிகளுக்கு தள்ளப்பட்டுள்ளது. அர சியல், பொருளாதார ,சமூக நெருக்கடி என பல்வேறு நெருக் கடிகளுக்கு முகங்கொடுத்துள் ளது. 75 வருட கால ஆட்சியாளர்கள் நாட்டை சூறையா டியுள்ளார்கள்.

இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச் சந்திரா தெரிவித்துள்ளார்.

கிண்ணியாவில் நேற்று (02) மாலை இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் தெரிவித்துள்ளவை வருமாறு–

தேர்தல் வாக்குறுதிகளை மக்கள் மத்தியில் உணர்வு பூர்வமாக கூறிவிட்டு பழைய சாக்கடைக்கே அப்படியே செல்கிறார்கள். தேசிய மக்கள் சக்தியின் ஆதரவு தற்போது பெருகியுள்ளது. நெருக்கடி நிலைமையின் போதும் மக்கள் எழுச்சியின் மூலம் வலு சேர்க்கப்பட்டு ஆட்சியை விரட்டியடித்து, ராஜபக்ஷ கும்பல்களும் இதன் போது விரட்டியடிக் கப்பட்டார்கள்.

ஊழல் மோசடியற்ற நாட்டை உரு வாக்க வேண்டும். வீண் விரயம் இன வாதம் போன்றவற்றை இல்லாதொழிக்க வேண்டும். புதிய அரசின் விளைவாக ரணிலின் நரித்தனமே தேர்தல் ஒத்தி வைப்புக்கான காரணமாக காணப்படு கிறது. 75 வருட கால சாபமும் நாட்டின் ஆட்சி முறையில் தொடர்கின் றது .

ரணில் விக்ரமசிங்க பதவி ஏற்பின் பின் பொருளாதாரக் கஷ்டம் நீங்கி நாடு செழித்தோங்கும் என பலர் கூறியார்கள். ஆனால் தற்போது விலை ஏற்றம், வேலை வாய்ப்பு இன்மை போன்ற நிலைமை ஏற்பட்டுத் தலை கீழாக மாறியுள்ளது.

பெற்றோல் விலை கடந்த காலத்தில் ஒரு ரூபாவால்தான் அதிகரித்தது. ஆனால் தற்போது 30 ரூபாவரையான பாரிய விலை அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அது போன்று தேசிய சொத்துக்கள் அறா விலைக்குத் தாரை வார்ப்பு செய யப்பட்டு விற்பனை செய்யப்படுகிறது. இனவாதம் விதைக்கப்படுகிறது . அத்தனைக்கும் ஆட்சியாளர்களும் பொறுப்புக் கூற வேண்டும் .

இன, மத ஒற்றுமையுடன் இந்த நாட்டில் வாழ வேண்டுமாக இருந்தால் தேசிய மக்கள் சக்தியின் ஆட்சி மலர வேண்டும். தென் இலங்கையில் தேசிய மக்கள் சக்தியின் வேலைப்பாடுகள் மக்களின் ஒத்தாசை காணப்படுகிறது அது போன்று வடக்குக் கிழக்கில் விஸ்தரிக்க வேண்டும்.

கிண்ணியாவில் தேசி மக்கள் சக்தியின் மூதூர் தொகுதிக்கான மாநாடானது எதிர்வரும் 14 ஆம் திகதி கிண்ணியா நகர சபை மைதானத்தில் மாலை 4 மணிக்கு இடம் பெறவுள்ளது. இந்த மாநாட்டில் தோழர் அநுரகுமார திசாநாயக்க உட்பட பலர் கலந்து கொள்வர்.

இதன் மூலம் தேசிய மக்கள் சக்தியின் பிரமாண்ட மாநாடாக இந்த மாநாடு முழு இலங்கைக்கும் எடுத்துக் காட்டாக காணப்படும் என்பதில் எந்த வித ஐயப்பாடும் இல்லை.

எமது ஆட்சி மலர்ந்தால் ஊழல் மோசடியற்ற நாட்டை உருவாக்கி பக்கச்சார்பற்ற விசாரணை இடம் பெறும் என்பதை தெரிவித்துக் கொள்கின் றேன்.– என்றார்.

# பூநகரிக்கு பொதுச் சுகாதார பரிசோதகர் நியமனம்



(த.சுபேசன்)

பூநகரி சுகாதார வைத்திய அதி காரி பணிமனையின் புதிய மேற் பார்வைப் பொது சுகாதாரப் பரிசோ தகராக ஆ.ஜென்சன் றொனால்ட் பதவி உயர்வு பெற்று நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

எழுத்தாளர், கவிஞர் சூரியநிலா என அறியப்படும் பொது சுகாதாரப் பரிசோதகர் ஆ.ஜென்சன் றொனால்ட் யாழ். பல்கலைக்கழகத்தின் சுகா தார முகாமைத்துவ விஞ்ஞான முது மானிப் பட்டதாரியாவார். இவர் தனது பதினாறு வருடகால பொதுச் சுகாதார சேவையில் கொடிகாமம், எழுதுமட்டுவாழ், பருத்தித்துறை மற் றும் மந்துவில் பொது சுகாதார பிரி வுகளில் பொது சுகாதார பரிசோ தகராக கடமையாற்றியிருந்தார்.

தற்போது வடமாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தால் நடத்தப்பட்ட மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் பதவிக்கான நேர்முகத் தேர்வினூடாக தெரிவு செய்யப்பட்டு வெற்றிடமாகவிருந்த பூநகரி சுகாதார வைத்திய அதிகாரி பிரிவின் மேற்பார்வை பொதுச் சுகாதாரப் பரிசோதகராக வெள்ளிக் கிழமை(01) தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

# இந்தியாவிற்கு விஜயம் மேற்கொள்கிறார் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்!

இந்தியாவில் நடைபெறும் ஜி 20 மாநாட்டில் அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன்பங்கேற்பார்எனஅதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜி-20 நாடுகள் அமைப்பின் உச்சி மாநாடு எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதியில் இந்திய தலைநகர் டில்லியில் நடைபெறவுள்ளது.

இந்த நிலையில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்பதற்காக அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் எதிர்வரும் 7 ஆம் திகதி இந்தியாவுக்கு பயணம் மேற்கொள்வார் என வெள்ளை மாளிகை அறிவித்துள்ளது.

மேலும் இந்திய பிரதமர் மோடியுடன் 8 ஆம் திகதி ஜோ பைடன் இரு தரப்பு சந்திப்பில் பங்கேற்கவுள்ளார் என்றும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் ஜி-20 மாநாட்டில் பங்கேற்பார் எனவும் வெள்ளை மாளிகை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



குறித்த மாநாட்டில் ஜோபைடன், ஏனைய உறுப்பு நாட்டு தலைவர்களுடன் தூய்மையான எரிசக்தி மாற்றம், காலநிலை மாற்றத்தை எதிர்த்து போராடுவது உள்ளிட்ட உலகளாவிய பிரச்சினைகளை சமாளிப்பதற்கான கூட்டு முயற்சிகள் குறித்து விவாதிப்பார் என கூறப்படுகிறது. ஜோ பைடனுக்கும் மோடிக்கும் இடையிலான இரு தரப்பு பேச்சு வார்த்தையில் இரு நாட்டு வர்த்தகம், பாதுகாப்பு, பொருளாதாரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து ஆலோசனை நடத்துவார்கள் என எதிர் பார்க்கப்படுகிறது.

## இந்திய விண்வெளி நிறுவனத்தில் ஆதிக்கம் செலுத்தும் தமிழர்கள்!






சூரியனை ஆய்வு செய்யும் இஸ்ரோவின் ஆதித்யா எல்-1 விண்கலம் வெற்றிகரமாக விண்ணில் ஏவப்பட்டுள்ளது.

பி.எஸ்.எல்.வி.சி-57 ரொக்கெட் மூலம் சிறீஹரிகோட்டா சதீஷ் தவன் ஆய்வு மையத்திலிருந்து நேற்றையதினம் இந்த விண்கலம் ஏவப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின் இயக்குநராக தமிழகத்தைச் சேர்ந்த பெண் விஞ்ஞானி நிகர் ஷாஜி பொறுப்பு வகிக்கிறார் என தெரிவிக்கப்படுகின்றது.

வெற்றிகரமாக சந்திரனுக்கு அனுப்பப்பட்ட சந்திரயான் 3, சந்திரயான் 1, சந்திரயான் 2 என மூன்று திட்டங்களின் இயக்குநர்களும் தமிழர்கள் என்ற வரிசையில் சூரியனை ஆராய்ச்சி செய்ய இஸ்ரோ அனுப்ப உள்ள ஆதித்யா எல் 1 திட்டத்தின் இயக்குநராகவும் தமிழரே செயல்படுகிறார்.

## சோனியா காந்தி மருத்துவமனையில்!

காங்கிரஸ் கட்சியின் முன்னாள் தலைவர் சோனியா காந்தி உடல் நலக்குறைவால் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

காய்ச்சல் அறிகுறி காரணமாக டில்லியில் உள்ள சேர் கங்காராம் மருத்துவமனையிலேயே சோனியா காந்தி அனுமதிக்கப்பட்டுள்ளார் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

மருத்துவர்களின் தீவிர கண்காணிப்பின் கீழ் சோனியா காந்திக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது எனவும் அவரது உடல் நிலை மெல்ல மெல்ல சீராகி வருகிறது என்றும் மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## பிரக்யான் ரோவர் தனது பணியை நிறைவு செய்தது!

சந்திரயான் 3 விண்கலத்தின் பிரக்யான் ரோவர் தனது பணியை வெற்றிகரமாக முடித்ததாக இந்திய ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ தெரிவித்துள்ளது.

நிலவை ஆராயும் நோக்கில் கடந்த மாதம் 23 ஆம் திகதி சந்திரயான்-3 விண்கலத்தின் விக்ரம் லேண்டர் நிலவின் மேற்பரப்பில் வெற்றிகரமாக தரையிறங்கியது.

நிலவின் வெப்ப கடத்துத்திறன் மற்றும் வெப்பநிலையை தெரிந்து கொள்வதற்காக கருவியும் தரையிறங்கும் இடத்தை சுற்றி நில அதிர்வு தொடர்பாக ஆராய்வதற்காக கருவியும் மின் திறன் கொண்ட துகள்களை பற்றி ஆராய எல்.பி. கருவியும் விக்ரம் லேண்டரில் அனுப்பப்பட்டுள்ளன.

தற்போது வரை நிலவில் 100 மீட்டர் தூரத்தை கடந்து ரோவர் உலா வந்து கொண்டிருப்பதாக இஸ்ரோஅறிவித்துள்ளது.

இந்நிலையில், சந்திரயான் 3 விண்கலத்தின் விக்ரம் லேண்டரும், ரோவரும் இன்னும் இரண்டு அல்லது மூன்று செயலிழக்க தொடங்கும் என்று இஸ்ரோ தலைவர் சோம்நாத் தெரிவித்திருக்கிறார்.

ஏனென்றால், நிலவில் அடுத்த 14 நாட்கள் இரவு என்பதால் ரோவர் மற்றும் லேண்டரின் செயல்பாடுகள் செயலிழக்க தொடங்கும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ரஷ்ய இராணுவத்தில் இணைக்கப்படவுள்ள அதிபயங்கரமான சர் மாட் ரக ஏவுகணைகள்!



ரஷ்யாவின் 'மிகப்பயங்கரமான' ஏவுகணை என்று கருதப்படும் சர்மாட் ரக ஏவுகணைகளை இராணுவத் தில் இணைக்கவுள்ளன என அறிவிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யா மீது மோத வேண்டும் என்று எந்தவொரு நாடு நினைத்தாலும் அவர்களை ஒரு முறைக்கு இரு முறை சிந்திக்கக்க வைக்கும் என்று ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினால் வர்ணிக்கப்பட்ட இந்த ஏவுகணையானது, கண்டம் விட்டு கண்டம் பாய்ந்து தாக்கக் கூடிய திறன் கொண்டுள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் அதிநவீன சர்மாட் ரக ஏவுகணைகளானது பயன்பாட்டுக்கு தயார் நிலையில் நிறுவப்பட்டுள்ளன என்று ரஷ்யாவின் ராஸ்காஸ்மாஸ் விண்வெளி ஆய்வு மையத்தின் தலைவர் யூரி போரிசொவ் கூறியுள்ளார்.

அதி பயங்கராமான ஆயுதங்களை, நவீன தொழில்நுட்பங்களை பயன்படுத்தி ரஷ்யா உருவாக்கி வருகிறோம் என ஜனாதிபதி புடின் கடந்த 2018 ஆம் ஆண்டு அறிவித்திருந்தார்.

அதன் பட்டியலில் இந்த சர்மாட் ஏவுகணையும் அடங்குகின்றது, இதனை 'சாத்தான்' என்று நோட்டோ அமைப்பு குறிப்பிடுகின்றது.

இந்த ஏவுகணையினை பயன் படுத்தி, ஒரே நேரத்தில் பல்வேறு இலக் குகளைத் தாக்கி அழிக்க முடியும், அதற்கு ஏற்றாற் போல ஏராளமான வெடிபொருட்கள் இதில் பொருத்தப்பட்டுள்ளது.

இந்த சர்மாட் ஏவுகணைகள் மிகக் குறைந்த உந்துதல் கட்டத்தைக் கொண்டிருப்பதனால், இது ஏவப்படுவதை முன் கூட்டியே கண்டறிந்து இடைமறித்து அழிக்க முடியாது என்று கூறப்படுகிறது.

அதுமாத்திரமல்லாமல், தற்போது பயன்பாட்டிலுள்ள எந்தவொரு வான்பாது காப்பு ஏவுகணைகளாலும் சர்மாட் ஏவுகணையைத் தடுக்க முடியாது என்றும் ரஷ்யா தெரிவித்துள்ளது.உக்ரைன் மீதான படையெடுப்பிற்கு எதிராக மேலைத்தேய நாடுகள் இராணுவ ரீதியில் தலையிட்டால் அவர்கள் மிகக் கடுமை யான விளைவுகளை சந்திக்க வேண்டி வரும் என்றும் புடின் எச்சரித்திருந்தார்.

# தைவானில் விமான சேவைகள் தற்காலிகமாக இடை நிறுத்தம்!



தைவானில் ஏற்பட்டுள்ள புயல் காரணமாக தற்காலிகமாக 46 விமான சேவைகள் இடை நிறுத்தப்பட்டுள்ளன.

தீவு நாடான தைவானில் கேப் எலுவான்பி நகரின் கிழக்கு பகுதியில் புதிய புயல் உருவாகி உள்ளது.

ஹைகுய் என பெயரிடப்பட்ட இந்த புயலானது தைவானின் மேற்கு பகுதியை நோக்கி நகர்ந்து வருகிறது என கூறப்படுகிறது.

குறித்த புயலானது தைவானில் கரையை கடக்கும்போது மணிக்கு 16 கிலோ மீட்டர் வேகத்தில் பலத்த காற்று வீசும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது.

இதனால் முன்னெச்சரிக்கை நடவடிக் கையாக தைவானில் 28 சர்வதேச விமான சேவைகள் மற்றும் 18 உள்நாட்டு விமான சேவைகள் தற்காலிகாமாக நிறுத்தப்பட்டுள்ளன.

சில விமானங்கள் புறப்பட தாமதமானதால் பயணிகள் பெரும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் என கூறப்படுகிறது.

## அமெரிக்காவில் குடியேற காத்திருக்கும் ஆப்கானியர்கள்

தலீபான்கள் ஆட்சிக்கு வந்த பின்னர் அமெரிக்காவில் குடியேற 8 இலட்சத்து 40 ஆயிரம் ஆப்கானியர்கள் சிறப்பு வீசாவை பெறுவதற்கு காத்திருகின்றனர் என வெளியுறவு அமைச்சகம் தனது அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத நடவடிக்கைகள் அதிகரித்ததோடு, குறிப்பாக பெண்கள் மீது ஏராளமான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளன.

இந்த நிலையில் போர் முயற்சிகளுக்கு உதவிய மக்களுக்கு அமெரிக்காவில் குடியேறும் வகையில் சிறப்பு வீசா வழங்கும் திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2009 ஆம் ஆண்டிலேயே இந்த திட்டம் கொண்டு வரப்பட்டாலும் தலீபான்கள் ஆட்சிக்கு வந்த பிறகு இதற்கு ஏராளமான ஆப்கானியர்கள் விண்ணப்பித்து வருகின்றனர் என

# சிலியில் விபத்து: 7 பேர் பலி!



தென் அமெரிக்காவில் அமைந் துள்ள சிலி நாட்டின் கான்செப்சியொன் மாகாணம் சன் பெட்ரொ டிலா பாஹ நகரின் அருகே பேருந்து மீது தொடருந்து மோதி விபத்தொன்று இடம்பெற்றுள்ளது.

சன் பெட்ரொ டிலா பாஹ நகரின் அருகே உள்ள தொடருந்து தண்டவாளத்தை பேருந்து கடக்க முயற்சித்த போது வேகமாக வந்த தொடருந்து பேருந்து மீது மோதி விபத்து ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையில் 14 பயணிகளுடன் சென்ற பேருந்தில், விபத்தில் சிக்கி 7 பயணிகள் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது. மேலும், 7 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

தகவலறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற பொலிஸார் படுகாயமடைந்தவர்களை மீட்டு அருகில் உள்ள மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.